
வான் மழையே வா
விசு அய்யர்

நூல் அறிமுகம்

நூலின் பெயர்	:	**வான் மழையே வா..!!**
நூல் ஆசிரியர்	:	விசு அய்யர்
எழுத்து	:	11 புள்ளி
முதற் பதிப்பு	:	2024
உரிமை	:	ஆசிரியருக்கு
கணினி அச்சு உதவி	:	மணி பதிப்பகம்
பக்கம்	:	**24**
மதிப்பு	:	இந்திய ரூபாயில் ரூ.30

வாழ்த்துரை

இந்த குரோதி ஆண்டு (2024 ஆம் ஆண்டு) வெளியீடாக இந்த நூல் ஆசிரியர் திரு விசு அய்யர் அவர்கள் "**வான் மழையே வா**" என்ற தனது நூலுக்கு மதிப்புரை வழங்க வாய்ப்பு தந்து இருக்கிறார். அவருக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளை பதிவு செய்கிறேன்.



R. Manikandan, B.Com.

Treasurer, arulalayam

புத்தகம் எழுதுவது ஒரு கலை. அதை தாண்டி அதை ரசிக்கும்படி படைப்பது என அந்த கலையை தனக்குள் வைத்து இருக்கும் இந்த நூல் ஆசிரியரின் இந்த படைப்பு, சிறப்பு.

சைவர்களின் உயிர் வேதமான தோத்திர நூல்கள், பன்னிரு திருமுறைகள் தான். மனித வாழ்வில் எல்லா வளமும் பெறுவதற்கும், எதிர்பாராத இன்னல்களை தவிர்ப்பதற்கும், இறைவனிடம் கேட்டுப் பெரும் அரும் வழிகாட்டி தான் திருமுறை.

"நீரின்றி அமையாது உலகு" என்று சொல்லும் வள்ளுவமும் மழை வந்தால் லீவு கிடைக்கும் என்று சிறு வயது பள்ளி பிள்ளைகளும், மழை வந்தால் விளையாட முடியாதே என்று தவிக்கும் சிறார்களும் **rain .. rain .. go away** என்று பாடும் **rhyms** நமக்கு கேட்காமல் இல்லை.

பூமியில் வாழும் அனைத்து உயரினங்கள் மற்றும் தாவரங்களுக்கு தண்ணீர் அவசியம். எங்கெல்லாம் நீர் இருக்கிறதோ அங்கு எல்லாம் உயிரினங்கள் வாழும் என்பதால் தான் சந்திர மண்டலத்தில் கூட நீர் இருக்கிறதா என்று ஆய்வுகள் செய்கிறார்கள்.

இந்த வான் மழை பொய்த்து விட்டால், அவ்வளவு தான், தெருவெங்கும் பிளாஸ்டிக் கூடம், தண்ணீர் லாரி எப்போ வரும் என்று காத்திருக்கும் நிலை என பல அவலங்களை நாமும் செய்திகளில் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

இது போன்ற இயற்கை பொய்த்து மழை தர தவறிய போதும், தமிழால் பாட்டிசைத்து இறைவனை வேண்டி பாடினால் பூமித் தாயை குளிரவித்து மழை பொழியும் என்பது காலம் காலமாக வந்த நம்பிக்கை. அது இன்னமும் இந்த நூற்றாண்டில் கூட நிகழக்கிறது. அப்படி பாடக்கூடிய திருமுறை பாடல்களை தொகுத்து இந்த நூல் ஆசிரியர் தனது இருக்கிறார்.

மழையின் சிறப்புகளை முதல் பகுதியில் தனது இருப்பது படிப்பதற்கு சுவையாக இருந்தாலும், சைவ அன்பர்களுக்கு இது ஒரு பிரசாதமாகவே இருக்கும் என்பதில் அசாத்திய நம்பிக்கை எனக்கு உண்டு. நிலத்தடி நீர் குறைந்து போதல், வறட்சி, வெப்ப நிலை உயர்வு மழை பொய்த்து போதல், என்ற சிக்கலுக்கு இந்த நூல் ஒரு மா மருந்தாக இருக்கும் என்பதை சொல்லும் போது, உண்மையிலேயே ஏற்படும் மகிழ்ச்சியை எண்ணிச் சொல்ல முடியாது.

ஒரு சோதிட குழுவில், தற்செயலாக இந்த நூல் ஆசிரியரை சந்தித்து அவர் தம் சோதிட சிந்தனைகளையும், ஆய்வு குறிப்புகளையும் படித்து ரசித்து பழகியவன் என்பதுடன் தொடர்ந்து ஆசிரியரின் இன்ன பிற நூலகளுக்கு வாழ்த்துரை தந்து உள்ளேன் என்பதில் உவகையுடன் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த புத்தகம் தொகுப்பு நூலாக வந்துள்ளமையால், அதனை ஆன்மிக அன்பர்கள் மட்டும் அல்ல தமிழறிந்த அனைவரும் வாங்கி படித்து இன்புற வேண்டும் என மெத்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பன்முக திறமை கொண்ட இந்த நூல் ஆசிரியரின், படைப்புகளில் இது இன்னொமொரு தொகுப்பு. இது மக்கள் மனதில் இடம் பிடிக்கும் என உறுதியாக சொல்லலாம். இந்த நூல் ஆசிரியர் வயது கூடினாலும், ஊக்கம் குறையாமல் மேலும் பல நூல்களை இந்த தமிழ் சமூகத்திற்கு படைத்து தர வேண்டும் என எனது விருப்பத்தை பதிவு செய்கிறேன்.

இந்த புத்தகத்தை வாங்கி படித்து, பயன் அடைந்து நூல் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டும் என அன்புடன் விரும்புகிறேன்..

உங்கள்

மணிகண்டன்

maniiyer73@gmail.com

என்னுரை

"நல்லோர் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது ஔவையார் அருளிய மூதுரை பாடல்.

மழைப் பெய்யும் போது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். மழையில் நனைந்து விளையாடுவதும் ஒரு மகிழச்சியான தருணம் தான்.

பெரியவர்கள் மழைப் பொழிந்தால் தான் நமக்கு தண்ணீர் கிடைக்கும் என்று சொல்வார்கள். நாம் உயிர்வாழ தேவைப்படும் நீரை மழை தான் தருகிறது என்று கூறுகிறார்கள். ஆனால் மழை எங்கிருந்து வருகிறது எப்படி உருவாகிறது என்று உங்களுக்கு தெரியுமா..?

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்." (17)

என திருக்குறள் சொல்கிறது. ஆவியான கடல் நீர் மேகமாகி அந்தக் கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல் கூட வற்றாமல் இருக்கும் என்கிறார். ஆக, கடல் நீரினால் ஆன மேகமே மழையை பொழிவிக்கிறது என்றே திருவள்ளுவரும் சொல்கிறார்.

தண்ணீர் அவசியம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மார்ச் 22ம் தேதி உலக தண்ணீர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. பூமியில் நிலப்பகுதி 29%. மீதமுள்ள 71% நீர்பரப்பு தான். ஆனால் இந்த 71% நீர் பரப்பளவில் 97.5% கடலில் இருக்கும் உப்பு நீர். மீதியுள்ள 2.5% அளவிற்கே நிலத்தடிநீர் உள்ளது. இதிலும் குறிப்பிட்ட சதவீதம் பனிக்கட்டிகள் உள்ளன.

மீதி தண்ணீரை தான் உலக மக்கள் அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால் உயரும் வெப்பநிலை பருவநிலை மாற்றம் காடுகளின் பரப்பளவு குறைதல், மணல் அரிப்பு, மணல் கொள்ளை, போன்ற பல்வேறு காரணங்களால் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்து விட்டது.

தண்ணீரை மிக சிக்கனமாக செலவழிக்க வேண்டும். அப்போது தான் எதிர்கால சந்ததியினருக்கு தண்ணீர் இருக்கும். இதை அனைவரும் மனதில் ஏற்றிக் கொள்ள வேண்டும். மூன்று பருவங்களில் பெய்த மழை தமிழ் நாட்டில், ஒரு பருவத்தில் தான் பொழிகிறது. அதுவும் ஒரு சில ஆண்டுகளில் பொய்த்து விடுகிறது.

மரம் வைத்தால் தான் மழை கிடைக்கும் என எத்தனை சொல்லியும் மரம் வளர்க்க மனம் ஏனோ பலருக்கும் வருவதில்லை. இந்த சூழலில் மழை வேண்டி பெற ஒரே வாய்ப்பு வழிபாடு ஒன்று தான். தமிழால் வழிபாடு செய்தால், வானமே கண் திறந்து மண்ணுக்கு மழை தரும்.

சிவ பெருமானையே முழு முதற்கடவுளாக கொண்ட சைவ அன்பர்கள், போற்றி வழிபடும் திருமுறைகளில் இருந்து திருஞானசம்பந்தர் அருளிய தேவார பதிகங்களை தொகுத்து இந்த நூலில் படைத்து தனது உள்ளோம். மேகராக குறிஞ்சி பண்ணில் பாடுவது போல மழை அமிர்தவரஷனி ராகத்தில் பாடும் ஐதீகமும் நம்மவரிடம் உண்டு. நீர் நிலைகளில் அமர்ந்து குழுவாக படுவது, நந்தி எம்பெருமானை நீரில் அமர்த்தி பாடி வேண்டுவது என்பன வறட்சியால் வாடும் மக்களுக்கு இறைவன் கருணை கண் திறப்பதும் மழை வருவதும் பல இடங்களில் நிதர்சனமானவை.

தமிழ் வேதமாக போற்றப்படும் பன்னிரு திருமுறைகளில் இருந்து பாடல் குறிப்புகளை மட்டும் தொகுத்து தந்து உள்ளோம். இதன் பொருளை இறைவன் உள் நின்று உணர்த்துவான் என்பதாலும், அதை தெரிந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் தம்மிடம் உள்ள

திருமுறை நூல்களில் இருந்து எடுத்து பெறலாம் என்பதற்காகவும் பாடல் எண் குறிப்புகளையும் தந்து உள்ளது.

பஞ்சாட்சர மந்திரத்திற்குரிய இறைவனாரும், க்ஷடாக்ஷர மந்திரத்திற்குரிய வேலவனும் வேறு அல்ல. முருகன் அறுமுக சிவனே என்ற நோக்கில் அன்பர்கள் வேறுபாடு கருதாது இந்த தொகுப்பை தமிழ அறிந்த அனைத்து அன்பார்களும் படித்து படனம் செய்து இன்புற வேண்டும். கோடை காலத்தில் படித்தால் வெப்பம் தனியும், கார்காலத்தில் படித்தால், மழை பெறவும் முடியும் என்ற உறுதியான நம்பிக்கையில் படித்து பயன் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தேவைக்கு மட்டும் அல்லாது வாய்ப்பு கிடைக்கும் மற்ற சமயங்களிலும் படிக்கலாம் என்ற அன்பு வேண்டுகோளை வைக்கிறேன்.

"**வான் மழையே வா**" என்று தலைப்பிட்டு, இந்த நூலினை வழக்கம் போல கணினி அச்சு செய்து புத்தகமாக உருவாக்கி கொடுத்த **மணி பதிப்பகத்தாரு**க்கு நன்றியை பதிவு செய்கிறேன்.

எனது வேண்டுகோளை ஏற்று நூலிற்கு வாழ்த்துரை தந்த அருளாலயம் அமைப்பின் பொருளாளர் **திரு.மணிகண்டன் அய்யர் அவர்களுக்கு** மனம் நெகிழ்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் பதிவு செய்கிறேன்.

நமது நூல் படைப்பின் வரிசையில் இன்னொரு ,மைல் கல் என்ற ஆவலில் இந்த புத்தகத்தினை வழக்கம் போல வாங்கி படித்து பயன் அடைந்து நூல் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த நூல் அமேசான், விக்கி மீடியா மற்றும் மின் நூலகம் போன்ற தளங்களில் கிடைக்கும். பேரன்புடன்

விசு அய்யர்

iyervisuiyer@gmail.com

இறைவனின் அற்புத செயல்களில் இப்பூமியில் மழை பெய்வித்தலும் ஒன்று. "மழை எப்படி உருவாகிறது?" என்ற கேள்விக்கு இதுவரை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து பதில் சொல்ல முடியவில்லை. தற்போதுள்ள அறிவியல் விளக்கங்கள் அனுமானங்களால் உருவானவை தான்.

வளிமண்டலத்திலிருக்கும் நீராவியானது ஒடுங்கி, நீர்மநிலை அடைந்து, ஈர்ப்பு விசையின் காரணமாக கீழ்நோக்கி விழும் அளவுக்குக் கனமாகித் துளிகளாக நிலத்தை நோக்கி விழுவதே மழை என சிறு வயதில் நாம் அறிவியல் பாடாத்தில் படித்து இருப்போம்.

ஆவியாதல் செயல் முறை மூலம் கடலில் இருந்தும் பிற நீர்நிலைகளில் இருந்தும், சூரியனின் வெப்பத்தால், நீராவியாகி வானை நோக்கி மேலே எழுந்து செல்கின்றது. அப்படி செல்லும்போது, வெப்பநிலை குறைவதனால் ஒடுக்கம் அடைந்து சிறு சிறு நீர்மத்துளிகள் உருவாகின்றன.

அவை ஒரு நிலையில் மேகங்களை உருவாக்கும். அந்த மேகங்கள் மேலும் குளிர்வடையும்போது, அவை பெரிய நீர்த்துளிகளாக மாறி, அவற்றின் எடை அதிகரிக்கும். புவி ஈர்ப்புவிசை காரணமாக மேகங்களில் இருந்து நீரானது நீர்த்திவலைகளாக பூமியின் மேற்பரப்பில் விழும் போது அவை மழையாக வருகிறது.

மொத்த நீரும், மழை விழும் போது நிலத்தை அடைவதில்லை. அதில் ஒரு பகுதி பாலைவனம் போன்ற பகுதிகளில் மொத்த நீரும் ஆவியாகி விடுவதும் உண்டு. ஒரு இடத்தில் மழை அதிகமாகப் பெய்யும் காலம், அவ்விடத்திற்குரிய மழைக்காலம் என அழைக்கப்படுகின்றது.

மழை பெய்வதை முன்னரே அறிய பிராணிகளின் நடத்தைகளைக் கண்காணிக்கலாம். மழை பெய்யப் போவதை முன் கூட்டியே அறியும் திறன் பிராணிகளுக்கு உண்டு. மயில் - தனது தோகையை விரித்து நடனம் ஆடும். எருமை - வானத்தைப் பார்த்து முக்காளமிடும். ஈசல் - தனது இருப்பிடத்தை விட்டு வெளியே வந்து பறக்கும். பூனை - வீட்டு அடுப்பங்கரையினுள் பதுங்கி இருக்கும். பறவைகள் - வானத்தில் தாழ்வாகப்பறக்கும். இது போல அனுபவத்தில் பெரியவர்களும், அறிவியல் அறிஞர்களும் சொல்லுவார்கள்.

மழையை பல வகையில் பெயரிட்டு வழங்குவார்கள் அவற்றுள் சிலவற்றை தெரிந்து கொள்வோம்.

ஆலி - மழை துளி
சோனை - விடா மழை
தூறல் - சிறிய மழை,
சாரல் - மலையில் பட்டு விழும் மழை.
அடைமழை - அடைத்த கதவு திறக்காதபடி பெய்யும் மழை
கனமழை - அளவில் பெரிய துளிகள் உள்ள மழை.
மாரி - மிதமான மழை
ஆலங்கட்டி மழை - பனிக்கட்டிமழை
பனிமழை - பனி மழையாக பொழிவது..
ஆழிமழை - கடல் பகுதியில் பொழியும்மழை
துளி - மழையை துளி
புயல் - காற்றுடன் வரும் மழை

இந்த பதிகத்தை மனம் உருகி பாட வான் மழை வரும் என்பது அனுபவ உண்மை. தொடர்ந்து படிப்போம் பயன்பெறுவோம்.

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.
திருநிலை நாயகி உடனுறை பிரம்மபுரீஸ்வரர் அருளும்
தலம்:சீர்காழி . பண் : மேகராக குறிஞ்சி

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரண் என்று சிறந்தவன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன் தான்
வழிபட்ட நலங்கொள்கோயிற்
வாவிதொறும் வண்கமலம் முகம்காட்டச்
செங்கு அமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே. (1)

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடு உடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீறு அலங்கரித்தான்
அமரர்தொழ வமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும்
இறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந்து அம்மானைப்
பாட்டயருங் கழுமலமே. (2)

அலங்கல்மலி வானவரும் தானவரும்
அலைகடலைக் கடையப்பூதங்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலத்தானுங்
கலங்கல் இலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே. (3)

பாரிதனை நலிந்து அமரர் பயம் எய்தச்
சயம் எய்தும் பரிசுவெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேல் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வு எய்துங் கழுமலமே. (4)

ஊர்கின்ற அரவம் ஒளி விடுதிங்களொடு
வன்னி மத்தம் என்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர்
செஞ்சடையான் நிகழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி இசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே. (5)

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோழமை
யளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகுப்ப
அதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகடம் இளகவளர் கரும்பிரிய
அகம்பாயுங் கழுமலமே. (6)

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணம்நான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுருவாய்
நின்றான் அமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்சுனையின் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே. (7)

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலும் அரக்கர்கோமான்
மிடல்வந்த இருபதுதோள் நெரியவிரல்
பணிகொண்டோ ன் மேவுங்கோயில்
நடவந்த உழவரிது நடவொணா
வகைபரலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்கரை
குவிக்குங் கழுமலமே. (8)

பூமகள்தன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றான் அமருங்கோயில
பாமருவும் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே. (9)

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணல்மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றான் உறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலி விழவினொலி
யிவையிசைய மண்மேல்தேவர்
கணமருவும் மறையினொலி கீழ்ப்படுக்க
மேல்படுக்குங் கழுமலமே. (10)

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்து
ளீசன்றன் கழல்மேல்நல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றான் நயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந் திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே.(11)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.
அறம் வளர்த்த நாயகி உடனுறை ஐயாரப்பர் அருளும்
தலம்:திருவையாறு பண் : மேகராக குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவு அழிந்திட்டு ஐம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமரும் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழை என்று அஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே. (1)

விடலேறு படநாகம் அரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறு ஒன்று அது ஏறி அஞ்சொலீர்
பலி என்னும் அடிகள் கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியின்
உடன் வந்து கங்குல் வைகி
திடலேறிச் சுரிசங்கம் செழு முத்து
அங்கு ஈன்று அலைக்கும் திருவையாறே. (2)

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பேராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலும் கோயில்
கொங்காளப் பொழினுழைந்து
கூர்வாயால் இறகு உலர்த்தி கூதல் நீங்கி
செங்கால் நல் வெண்குருகு
பைங்கானல் இரை தேரும் திருவையாறே.(3)

ஊன் பாயும் உடைதலைக் கொண்டு
ஊர் ஊரின் பலிக்கு உழல்வார் உமையாள் பங்கர்
தான் பாயும் விடையேறும் சங்கரனார்
தழலுருவர் தங்கும் கோயில்
மான் பாய வயலருகே மரமேறி
மந்தி பாய் மடுக்கள் தோறும்
தேன் பாய மீன்பாயச் செழுங்க
மலமொட்டு அலரும் திருவையாறே.(4)

நீரோடு கூவிளமும் நிலாமதியும்
வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கு
அணிந்த தத்துவனார் தங்கும் கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ் தார் வீதித்
தேரோடும் அரங்கேறி சேயிழையார்
நடம் பயிலும் திருவையாறே.(5)

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கு
அணிந்த புண்ணியனார் நண்ணும் கோயில்
காந்தாரம் இசை அமைத்துக்
காரிகையார் பண்பாடக் கவினார் வீதித்
தேம் தாம் என்று அரங்கேறிச்
சேயிழையார் நடமாடும் திருவையாறே.(6)

நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கி
வரும் புரம் மூன்றும் நீள்வாய் அம்பு
சென்றுலாம் படி தொட்ட
சிலையாளி மலையாளி சேரும் கோயில்
குன்றெலாம் குயில் கூவக்
கொழும்பிரச மலர்பாய்ந்து வாசம் மல்கு
தென்றலார் அடிவருடச்
செழுங்கரும்பு கண்வளரும் திருவையாறே (7).

அஞ்சாதே கயிலாயமலை எடுத்த
அரக்கர்கோன் தலைகள் பத்தும்
மஞ்சாடு தோள் நெரிய அடர்த்து
அவனுக்கு அருள்புரிந்த மைந்தர் கோயில்
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்
வீழ இளமேதி இரிந்து அங்கு ஓடி
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல் படியும் திருவையாறே. (8)

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிக அகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாத
வகை நின்றான் மன்னும் கோயில்
கோலோடக் கோல்வளையார்
கூத்தாட குவிமுலையார் முகத்தில் நின்று
சேலோடச் சிலையாடச்
சேயிழையார் நடமாடுந் திருவையாறே. (9)

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியரும் குணமொன்றில்லா
மிண்டாடும் மிண்டர் உரை
கேளாதே ஆள் ஆமின் மேவித் தொண்டீர்
எண்டோளர் முக்கண்ணர்
எம் ஈசர் இறைவர் இனிது அமரும் கோயில்
செண்டாடு புனல் பொன்னிச்
செழுமணிகள் வந்து அலைக்கும் திருவையாறே. (10)

அன்னமலி பொழில் புடை சூழ்
ஐயாற்று எம்பெருமானை அந்தண் காழி
மன்னிய சீர் மறை நாவன் வளர்
ஞானசம்பந்தன் மருவு பாடல்
இன்னிசையால் இவைபத்தும்
இசையுங்கால் ஈசன் அடி ஏத்துவார்கள்
தன்னிசையோடு அமருலகில்
தவநெறி சென்று எய்துவார் தாழாதன்றே. (11)

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.
விருத்தகாம்பிகை நாயகி உடனுறை விருத்தகிரீஸ்வரர் அருளும்
தலம்:திருமுதுகுன்றம் - பண் : மேகராக குறிஞ்சி

மெய்த்தாறு சுவையும் ஏழிசையும்
எண்குணங்களும் விரும்பும்நால்வே
தத்தாலும் அறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கேபோல் அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூர் உலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கும் முதுகுன்றமே. (1)

வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளம் கிளர்தென்றல் திருமுன்றிற்
புகுந்துலவு முதுகுன்றமே. (2)

தக்கனது பெருவேள்வி சந்திரனிந்
திரனெச்சன் அருக்கன்அங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும்வருக்கைக் கதலிகமு
குயர்தெங்கின் குலைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே. (3)

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோன் இந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநாண்
அரியெரிகால் வாளியாக
மும்மதிலும் நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிடம் முதுகுன்றமே. (4)

இழைமேவு கலையல்குல் ஏந்திழையாள்
ஒருபாலா யொருபாலெள்கா
துழைமேவும் உரியுடுத்த ஒருவனிருப்
பிடமென்பர் உம்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை இரைதேரும்
வளர்சாரல் முதுகுன்றமே. (5)

நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிடம் நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதி
தகையாரும் வரம்பிடறிச் சாலிகழு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகள் முகம்மலர
வயல்தழுவு முதுகுன்றமே. (6)

அறங்கிளரும் நால்வேத மாலின்கீழ்
        இருந்தருளி யமரர்வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரமைந்தின்
        ஒன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
        கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
        முத்துலைப்பெய் முதுகுன்றமே. (7)

கதிரொளிய நெடுமுடிபத் துடையகடல்
        இலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை
        மலையைநிலை பெயர்த்தஞான்று
மதிலளகைக் கிறைமுரல மலரடியொன்
        றூன்றிமறை பாடவாங்கே
முதிரொளிய சுடர்நெடுவாள் முன்னீந்தான்
        வாய்ந்தபதி முதுகுன்றமே. (8)

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
        பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்
        துறநாடி யுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை
        செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
        மேலுயர்ந்த முதுகுன்றமே. (9)

மேனியில்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாதும்
உள்ளுணர்ந்தங் குய்மின்தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே. (10)

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யும்
முதுகுன்றத் திறையைமூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கெரிமூன் றோம்புதொழில் தமிழ்ஞான
சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர்
நீடுலகம் ஆள்வர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.
அழகுமுலை அம்மை உடனுறை திருவிழீ அழகர் அருளும்
தலம்:திருவீழிமிழலை - பண் : மேகராக குறிஞ்சி

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருள்சொல்லும் மிழலையாமே. (1)

பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட இளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே. (2)

எழுந்துலகை நலிந்துழலும் அவுணர்கள்தம்
புரமூன்றும் எழிற்கண்நாடி
உழந்துருளும் அளவையினொள் ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோன் உறையுங்கோயில்
கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநதம்
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டும் மிழலையாமே. (3)

உரைசேரும் எண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே. (4)

காணுமா றரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கள்மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான்கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
உத்தமனை இறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே. (5)

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்
றைம்புலனும் அடக்கிஞானப்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யும் மிழலையாமே. (6)

ஆறாடு சடைமுடியன் அனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங்கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலையாமே. (7)

கருப்பமிகும் உடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறுமரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தரன்றன் உடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே. (8)

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமொடு அன்னமாகி
அந்தமடி காணாதே அவரேத்த
வெளிப்பட்டோ ன் அமருங்கோயில்
புந்தியினான் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்
சேருமூர் மிழலையாமே. (9)

எண்ணிறந்த அமணர்களும் இழிதொழில்சேர்
சாக்கியரும் என்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரியும் நாதன்கோயில்
பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப்
பாராட்டும் ஓசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்மிழியும் மிழலையாமே. (10)

மின்னியலும் மணிமாடம் மிடைவீழி
மிழலையான் விரையார்பாதஞ்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன்
செழுமறைகள் பயிலும்நாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில்
ஈசனெனும் இயல்பினோரே. (11)

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.
ஏலவார்க்குழலி உடனுறை ஏகாம்பரநாதர் அருளும்
தலம்:திருக்கச்சியேகம்பம் - பண் : மேகராக குறிஞ்சி

வெந்த வெண்பொடிப் பூசும் மார்பின்
விரிநூல் ஒருபால் பொருந்த,
கந்தம் மல்கு குழலியோடும்
கடிபொழில் கச்சி தன்னுள்,
அந்தம் இல் குணத்தார் அவர் போற்ற,
அணங்கினொடு ஆடல் புரி
எந்தை மேவிய ஏகம்பம் தொழுது
ஏத்த, இடம் கெடுமே. (1)

வரம் திகழும் அவுணர் மா
நகர்மூன்று உடன் மாய்ந்து அவியச்
சரம் துரந்து, எரிசெய்த தாழ்சடைச்
சங்கரன் மேய இடம்
குருந்தம், மல்லிகை, கோங்கு,
மாதவி, நல்ல குரா, மரவம்,
திருந்து பைம்பொழில் கச்சி ஏகம்பம்
சேர, இடர் கெடுமே. (2)

வண்ண வெண்பொடிப் பூசும்
மார்பின் வரி அரவம் புனைந்து,
பெண் அமர்ந்து, எரி ஆடல்
பேணிய பிஞ்ஞகன் மேய இடம்,
விண் அமர் நெடுமாடம்
ஓங்கி விளங்கிய கச்சி தன்னுள்-
திண்ண மாம்பொழில் சூழ்ந்த
ஏகம்பம் சேர, இடர் கெடுமே. (3)

தோலும் நூலும் துதைந்த வரை
        மார்பில் சுடலை வெண் நீறு அணிந்து,
காலன் மாள் உறக் காலால் காய்ந்த
        கடவுள் கருதும் இடம்,
மாலை வெண்மதி தோயும்
        மா மதில் கச்சி மா நகருள்,
ஏலம் நாறிய சோலை சூழ்
        ஏகம்பம் சேர, இடர் கெடுமே. (4)

தோடு அணி மலர்க்கொன்றை
        சேர் சடைத் தூ மதியம் புனைந்து,
பாடல் நால்மறை ஆக, பலகணப்
        பேய்கள் அவை சூழ,
வாடல் வெண் தலை ஓடு, அனல்,
        ஏந்தி, மகிழ்ந்து உடன் ஆடல் புரி
சேடர் சேர் கலிக் கச்சி ஏகம்பம்
        சேர, இடர் கெடுமே. (5)

சாகம் பொன்வரை ஆகத் தானவர்
        மும்மதில் சாய் எய்து,
ஆகம் பெண் ஒருபாகம் ஆக,
        அரவொடு நூல் அணிந்து,
மாகம் தோய் மணி மாட
        மா மதில் கச்சி மா நகருள்,
ஏகம்பத்து உறை ஈசன் சேவடி
        ஏத்த, இடர் கெடுமே. (6)

வாள் நிலாமதி புல்கு செஞ்சடை
வாள் அரவம் அணிந்து,
நாண் இடத்தினில் வாழ்க்கை
பேணி, நகுதலையில் பலி தேர்ந்து,
ஏண் இலா அரக்கன் தன் நீள்
முடி பத்தும் இறுத்தவன் ஊர்,
சேண் உலாம் பொழில் கச்சி ஏகம்பம்
சேர, இடர் கெடுமே. (7)

பிரமனும் திருமாலும் கைதொழப்
பேர் அழல் ஆய பெம்மான்,
அரவம் சேர் சடை அந்தணன்,
அணங்கினொடு அமரும் இடம்,
கரவு இல் வண்கையினார்கள்
வாழ் கலிக் கச்சி மா நகருள்,
மரவம் சூழ் பொழில் ஏகம்பம்
தொழ, வில்வினை மாய்ந்து அறுமே. (8)

குண்டுபட்டு அமண ஆயவரொடும்,
கூறை தம் மெய் போர்க்கும்
மிண்டர், கட்டிய கட்டுரை
அவை கொண்டு விரும்பேன்மின்!
விண்டவர் புரம் மூன்றும்
வெங்கணை ஒன்றினால் அவியக்
கண்டவன் கலிக் கச்சி ஏகம்பம்
காண, இடர் கெடுமே (9).

ஏரின் ஆர் பொழில் சூழ்ந்த கச்சி
ஏகம்பம் மேயவனை,
காரின் ஆர் மணி மாடம்
ஓங்கு கழுமல நன்நகருள்,
பாரின் ஆர் தமிழ் ஞானசம்பந்தன்
பரவிய பத்தும் வல்லார்,
சீரின் ஆர் புகழ் ஓங்கி,
விண்ணவரோடும் சேர்பவரே. (10)

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.
இளம்கொம்பனையாள் உடனுறை வீரதட்டேஸ்வரர் அருளும்
தலம்:திருப்பறியலூர் வீரட்டம் -பண் : மேகராக குறிஞ்சி

கருத்தன், கடவுள், கனல் ஏந்தி ஆடும்
நிருத்தன், சடைமேல் நிரம்பா மதியன்-
திருத்தம் உடையார் திருப் பறியலூரில்,
விருத்தன் எனத் தகும் வீரட்டத்தானே. [1]

மருந்தன், அமுதன், மயானத்துள் மைந்தன்,
பெருந்தண்புனல் சென்னி வைத்த பெருமான்-
திருந்து மறையோர் திருப் பறியலூரில்,
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத்தானே. [2]

குளிர்ந்து ஆர் சடையன், கொடுஞ்சிலை வில் காமன்
விளிந்தான் அடங்க வீந்து எய்தச் செற்றான்-
தெளிந்தார் மறையோர் திருப் பறியலூரில்,
மிளிர்ந்து ஆர் மலர்ச்சோலை வீரட்டத்தானே. [3]

பிறப்பு ஆதி இல்லான், பிறப்பார் பிறப்புச்
செறப்பு ஆதி அந்தம் செலச் செய்யும் தேசன்-
சிறப்பாடு உடையார் திருப் பறியலூரில்,
விறல் பாரிடம் சூழ, வீரட்டத்தானே. [4]

கரிந்தார் இடுகாட்டில் ஆடும் கபாலி,
புரிந்தார் படுதம் புறங்காட்டில் ஆடும்
தெரிந்தார் மறையோர் திருப் பறியலூரில்,
விரிந்து ஆர் மலர்ச்சோலை வீரட்டத்தானே. [5]

அரவு உற்ற நாணா, அனல் அம்பு அது ஆக,
செரு உற்றவர் புரம் தீ எழச் செற்றான்-
தெருவில் கொடி சூழ் திருப் பறியலூரில்,
வெரு உற்றவர் தொழும் வீரட்டத்தானே. [6]

நரை ஆர் விடையான், நலம் கொள் பெருமான்,
அரை ஆர் அரவம் அழகா அசைத்தான்-
திரை ஆர் புனல் சூழ் திருப் பறியலூரில்,
விரை ஆர் மலர்ச்சோலை வீரட்டத்தானே. [7]

வளைக்கும் எயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும்படி தான் இருந்து, ஏழை அன்னம்
திளைக்கும் படுகர்த் திருப் பறியலூரில்,
விளைக்கும் வயல் சூழ்ந்த வீரட்டத்தானே. [8]

வளம் கொள் மலர்மேல் அயன், ஓதவண்ணன்,
துளங்கும் மனத்தார் தொழ, தழல் ஆய் நின்றான்-
இளங்கொம்பு அனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப் பறியல் வீரட்டத்தானே. [9]

சடையன்; பிறையன்; சமண் சாக்கியரோடு
அடை அன்பு இலாதான்; அடியார் பெருமான்;
உடையன், புலியின் உரி-தோல் அரைமேல்;
விடையன்-திருப் பறியல் வீரட்டத்தானே. [10]

நறு நீர் உகும் காழி ஞானசம்பந்தன்,
வெறி நீர்த் திருப் பறியல் வீரட்டத்தானை,
பொறி நீடு அரவன், புனை பாடல் வல்லார்க்கு
அறும், நீடு அவலம்; அறும், பிறப்புத்தானே. [11]

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.

பசும்பொன் மயிலாம்பாள் உடனுறை தாருகவனேஸ்வரர் அருளும் தலம்:திருப்பாராய்துரை - பண் : மேகராக குறிஞ்சி

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே. (1)

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல அடிகளே. (2)

வேதர்வேதமெல் லாமுறையால்விரித்
தோதநின்ற ஒருவனார்
பாதிபெண்ணுரு ஆவர்பராய்த்துறை
ஆதியாய அடிகளே. (3)

தோலுந்தம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலும்நெய்பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழல் அடிகளே. (4)

விரவிநீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவில்நின்றெரி யாடுவர்
பரவினாரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த அடிகளே. (5)

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கும் ஒலிசெய்பராய்த்துறை
அறையநின்ற அடிகளே. (6)

விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற அடிகளே. (7)

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்
பருக்கினாரவர் போலும்பராய்த்துறை
அருக்கன்றன்னை அடிகளே. (8)

நாற்றமாமல ரானொடுமாலுமாய்த்
தோற்றமும் மறியாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றல்மிக்க அடிகளே. (9)

திருவிலிச்சில தேரமண்ஆதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயில் எய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே. (10)

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற் சிதையாதன
செல்வன்ஞான சம்பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே. (11)


திருச்சிற்றம்பலம்

ஆசிரியரின்

மக்கள் மனம் கவர்ந்த பிற நூல்கள்.








































இந்த புத்தகங்களை, ஆன்லைனில், அமேசான், விக்கிமீடியா, மின் நூலகம் மற்றும் ஆடியோ புத்தகமாக Channel G podcastல் கேட்கலாம். இந்த புத்தக கட்டமைப்புக்கு பணம் தந்து உதவலாம்.

இது இன்னும் புத்தகம் வெளிவர ஊக்கம் அளிக்கும்.



ஆசிரியர் குறிப்பு..

விசு அய்யர், தமிழ்நாட்டில் உள்ள வீரம் செறிந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில், சிவகெங்கை சீமையில் இந்துக்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில், இன்று உலக எழுத்தறிவு தினமாக கொண்டாடப்படும் தினத்தில் தோன்றியவர்.



வரி சட்டத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். பள்ளி நாள் முதல் தொடர்ந்து சிறந்த மாணவனாக தேர்ந்து எடுக்கப்பட்ட இவர் இந்திய அளவிலான நினைவு திறன் போட்டியில் பரிசு பெற்றவர். தேசிய அளவிலான அதிவேக தட்டச்சு போட்டியில் வெற்றி பெற்றவர். “சித்தாந்த ரத்னா”, “திருவருட் செல்வர்”, “கைரேகை கலைஞன்” போன்ற இவர் பெற்ற பாராட்டுக்களும் நன்மதிப்பும் பெருமைக்கு உரியன.

இன்று வரை உண்மையான பிரம்மச்சரிய வாழ்க்கையில், உணவிலும், உணர்விலும் இயற்கையோடு இனைந்து வாழும் சீரிய ஒழுக்கத்தை கொண்டவர். பெரியபுராணம், திருக்குறள், மற்றும் சைவ திருமுறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் சமய இலக்கியங்களில் பல ஆய்வு கட்டுரைகளை பதிப்பித்து உள்ளார்.

பன்முக திறமை கொண்ட இவர் எழுதிய சோதிட புத்தகங்களும் வார இதழில் எழுதும் தொடர் கட்டுரைகளும் வாசகர்கள் நெஞ்சத்தை கிள்ளி செல்லும். இவருக்கு என்றே ஒரு வாசகர் கூட்டம் இவரை சுற்றி தொடரும்.

சென்னை அரிமா சங்கம், சென்னை சுழற் சங்கம், அறிதுயில் சங்கம் மற்றும் குடும்ப நற்பணி மன்றம் போன்ற பல இடங்களில் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தி உள்ளார்.

உடலாலும் உள்ளத்தாலும் சீரிய ஒழுக்கத்தினாலே இன்றும் சொல்லிலும் செயலிலும் இளைஞனாகவே இருக்கின்றார். சொந்த வாழ்க்கையில் மட்டுமின்றி, நடைமுறை வாழ்க்கையிலும் ஒரு ஒழுக்க முறையினை செயல்படுத்தும் இவர் கையில் திருக்குறளும், பையில் திருநீறும், மெய்யில் உருத்திராக்கமும் இருக்கும் என்பதே இவரின் எளிய அடையாளம்.